1987 நவம்பர் 13] [திரு. ஆர். எம். வீரப்பன்]

கேட்க வேண்டிய கேள்விகள் இருந்தால் அந்தத் துறை சம்பந்தப் பட்ட அமைச்சரிடத்திலே கேட்க வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(இ) திருவில்லிபுத்தூரில் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் தெளிவாகத் தெரியாதது குறித்து.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''கொடைக்கானல் தொலைக்காட்சி நிலையத்திலிருந்து அஞ்சல் செய்யப்படும் நிகழ்ச்சிகள் திருவில்லிபுத்தூர் நகரில் தெளிவாக தெரியாததால் அப்பகுதி மக்களின் கவலை குறித்த'' அவரசப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

அறிக்கை.

கொடைக்கானலில் உயர் சக்தி கொண்ட (10 கிலோவாட்) தொலைக்காட்சி அஞ்சல் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. சென்னை தொலைக் காட்சி நிலைய நிகழ்ச்சிகளை அப்பகுதியிலுள்ள மக்களும் காணும் வகையில் சென்னை—கொடைக் கானல் நுண் அலை தொடர்பு (Micro Wave Link) ஏற்படுத்தப்பட்டு இந்த அஞ்சல் நிலையம் 14–1–1987 முதல் செயல்பட்டு வருகிறது.

கொடைக்கானலைச் சுற்றியுள்ள 150 கிலோமீட்டர் தூரம் வரையில் வசிக்கும் மக்களும், நில அமைப்பு மற்றும் பருவ நிலையைப் பொறுத்து அதற்கு மேற்பட்ட தூரத்தில் இருக்கும் சில இடங்களில் உள்ளவர்களும் சென்னை தொலைக் காட்சி நிலைய நிகழ்ச்சிகளை காண முடிகிறது. ஆனால் மலை மறைவுப் பகுதிகளில் இவ்வஞ்சல் தெரிவதில்லை. அண்ணா, மதுரை ஆகிய மாவட்டங்களில் முழுமையாகவும், இராமநாதபுரம், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, காமராசர் மாவட்டங்களில் பெரும்பாலான இடங்களிலும் தொலைக்காட்சி ஒளிபரப்பு திருப்திகரமாக உள்ளது (Satisfactory Reception) என்று தொலைக்காட்சித் துறையினர் தெரிவித்துள்ளனர்.

[திரு. வி. வி. சுவாமிநாதன்] [1987 நவம்பர் 13

வத்திரா இருப்பு (Watrap) அருகேயுள்ள மலைத் தொடர்ச்சியினால் காமராசர் மாவட்டத்திலுள்ள திருவில்லி புத்தூர் நகரப் பகுதியில் கொடைக்கானல் தொலைக் காட்சி நிலைய அஞ்சல் நிகழ்ச்சிகள் தெளிவாகத் தெரிவதில்லை என்றும், இது இயற்கையினால் ஏற்பட்ட தடை என்றும், தொலைக்காட்சித் துறையினர் தெரிவித்துள்ளனர்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

(முற்பகல் 11-20)

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற விவர அறிக்கையில் வத்திராயிருப்பு அருகே யுள்ள மலைத் தொடர்ச்சியினால் காமராசர் மாவட்டத்திலுள்ள திருவில்லிபுத்தூர் நகரப் பகுதியில் கொடைக்கானல் தொலைக் காட்சி நிலைய அஞ்சல் நிகழ்ச்சிகள் தெளிவாகத் தெரிவதில்லை என்றும், இது இயற்கையினால் ஏற்பட்ட தடையென்றும் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே வத்திராயிருப்பு அருகில் அமைந்துள்ள அந்த உயர்ந்த குன்றின் மேல் ஒரு லோ பவர் மின் ட்ரான்ஸ்மிட்டர் அமைக்கவும், டி.வி. நிகழ்ச்சி தென் மாவட் டங்களுக்கு நன்கு தெரிய மதுரையில் உள்ள ஒளிபரப்பு நிலை யத்தை சக்தி வாய்ந்ததாக மாற்றவும், டி.வி. யின் இரண்டாவது சானலை மதுரையில் தொடங்கவும் மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, மலை நிழல் என்ற காரணத்தால், அங்கே இந்த ஒளிபரப்பு நிலையத்தால் பயன்பெறாத குறை இருக்கிறது. அதைப்போக்குவதற்கு அந்த இடத்தில் ஒரு குறைந்த சக்தியுள்ள ஒளிபரப்பு நிலையத்தை ஏற்படுத்த முடியுமா என்று மத்திய அரசுக்கு நாம் எழுத இருக்கிறோம். மத்திய அரசும் இதுபற்றி ஆய்வு செய்துகொண்டிருக்கிறார்கள்.

திரு. இரா. தாமரைக்கனி : துணைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிபுத்தூர் நகரில் ஒரு லட்சம் மக்கள் வசிக்கிறார்கள். 10 ஆயிரம் டி.வி.க்கள் இருக்கின்றன. ஆனாலும் தொலைக் காட்சி நிகழ்ச்சிகளைப் பார்க்க முடியாத நிலை இருக்கிறது. மத்திய அரசு இதனைச் செய்வதற்கு காலதாமதம் ஏற்படுமானால் ஸ்ரீவில்லிபுத்தூரில் தொலைக்காட்சி நுகர்வோர் மனமகிழ் மன்றம் என்று அமைத்திருக்கிறோம், ஸ்ரீவில்லிபுத்தூர் நகர்வாழ் மக் களுக்கு டிஸ்சார்ஜரை அமைத்து டெலிகிராப் கம்பி மூலமாக, மின்கம்பி மூலமாக இணைப்புகள் கொடுப்பதற்கு முன்வந்தால் அந்த மன்றங்களுக்கு மத்திய அரசு உதவ மாநில அரசு பரிந்துரை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

1987 நவம்பர் 13]

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : துணைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இதுபற்றி ஆய்வு அறிக்கை மத்திய அரசுக்கு—சம்பந்தப்பட்ட துறைக்கு அனுப்பப்பட இருக்கிறது. சம்பந்தப்பட்ட மத்திய துறை அதிகாரிகளிடம் தொடர்பு கொண்டு விரைவில் பரிகாரம் கிடைக்கநடவடி க்கையெடுக்கப் படும்.

(ஈ) தென்காசி வட்டத்தில் கால்நடைகள் கருச்சிதைவு நோயினால் பாதிப்பு.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ''தென்காசி வட்டத்தில் உள்ள கால்நடைகள் அதிக அளவில் கருச்சிதைவு நோயினால் பாதிக்கப்பட்டிருப்பது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

அறிக்கை.

தமிழ்நாட்டில் கருச்சிதைவு நோய் பரவலாக வெகு நாட்களாக இருந்து வந்துள்ளது. 1957-ல் இருந்து 1961 வரை செய்த ஆய்வின் மூலமாக இந்த நோய் மேற்குதொடர்ச்சி மலைச் சாரலில் உள்ள கிராமங்களில் அதிக அளவில் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. திருநெல்வேலி மாவட்டத்தில் தென்காசி, சங்கரன் கோயில், அம்பாசமுத்திரம் தாலுக்காக்களிலும், காமராஜர் மாவட்டத்தில் ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுக்காவிலும் அதிக கிராமங்கள் இந்த வியாதியால் பாதிக்கப்பட்டுள்ளன. தென்காசி தாலுக்காவில் 16 கிராமங்களிலும், அம்பாசமுத்திரம் தாலுக்காவில் 5 கிராமங்களிலும், சங்கரன்கோயில் தாலுகாவில் 9 கிராமங்களிலும், ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுக்காவில் மூன்று இடங்களிலும் இந்த நோய் அதிக அளவில் காணப்படுகிறது. தவிர இந்த ஆய்வின் போது எடுக்கப்பட்ட கணக்கின்படி இந்த நோய் தமிழ்நாட்டில் மூன்று சதவிகித மாடுகளிடையே காணப்பட்டது. அதே சமயம் மேற்கு தொடர்ச்சி பகுதியிலுள்ள கிராமங்களில் இந்த வியாதி சராசரியாக 29 சதவிகித மாடுகளிடையே காணப்பட்டது. இந்த நோய் பரவாமல் தடுக்க கிராமங்களிலுள்ள விவசாயிகளுக்கு தகுந்த பயிற்சியும், விவரங்களும் வழங்கப்படுகிறது. சில கிராமங்களில் இந்த நோய் வெகுகாலமாக இருப்பதற்கு காரணம் அங்குள்ள விவசாயிகள் கடைப்பிடிக்கும் மாடு வளர்ப்பு முறைகளும், மற்ற கால்நடைகள் அந்த கிராமங்கள் வழியாக மற்ற இடங்களுக்கு செல்லுதலும் முக்கிய காரணங்கள் ஆகும். ஆகவே